முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2020 யூலை

## (104) வியாபாரச் சூழல்

(Business Environment)

27-09-2020
பிற்பகல்
[02.00 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):

பக்கங்களின் எண்ணிக்கை : 07
வினாக்களின் எண்ணிக்கை: 06

(1) ***காலம் :*** *03 மணித்தியாலங்கள்*

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் பட்டியல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் பட்டியலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *தொடக்கம்* ***1.10*** *வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவுசெய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் தேவை (need) ஒன்றிற்கான ஓர் உதாரணமாக அமைவது எது?

(1) பாண் (2) தொழில் பாதுகாப்பு (3) உணவுகள் (4) மேற்சட்டைகள்

**1.2** பின்வருவனவற்றுள் தனியுடமை வியாபாரமொன்றின் ஓர் அனுகூலமாக அமைவது எது?

(1) வரையறையற்ற பொறுப்புக்கள் (2) நிதி திரட்டுவது கடினமானது
(3) தொடங்குவது எளிதானது (4) அதிகளவான சட்டத் தேவைப்பாடுகள்

**1.3** இழப்பீட்டுக் கோட்பாடு சம்பந்தப்படாத காப்புறுதியைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்க:

(1) கடல்சார் காப்புறுதி (2) ஆயுள் காப்புறுதி
(3) தீ அபாயக் காப்புறுதி (4) உடல்நலக் காப்புறுதி

**1.4** பின்வருவனவற்றுள் வியாபாரமொன்றின் உள்ளக நாட்டதாரராக (Stakeholder) இருப்பவர் யார்?

(1) ஊழியர்கள் (2) வாடிக்கையாளர்கள் (3) வழங்குநர்கள் (4) போட்டியாளர்கள்

**1.5** பின்வருவனவற்றுள் வியாபாரமொன்றின் உள்ளகச் சூழலின் ஒரு கூறாக (element) **அமையாதது** எது?

(1) அரசாங்கம் (2) பெறுமதி முறைமை

(3) நிறுவன கலாசாரம் (4) மனித வளங்கள்

**1.6** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக:

**(a)** குழுக் கூட்டங்கள், ஒரு முறைசார் தொடர்பாடல் முறையாகக் கருதப்படுகின்றன.

**(b)** உடல் மொழியும்கூட (Body language) ஒரு தொடர்பாடல் வழிமுறையாகக் கருதப்படுகிறது.

**(c)** இரைச்சல்கள் (Noise) மற்றும் குழப்பங்கள் (disturbances) என்பன பயனுறுதிமிக்க தொடர்பாடலைப் பாதிக்கின்ற பௌதிகக் காரணிகளாகக் கருதப்படுகின்றன.

மேலுள்ளவற்றுள், சரியான கூற்று/கூற்றுக்களாவன:

(1) **(a)** யும் **(c)** யும் மாத்திரம் (2) **(a)** மாத்திரம்

(3) **(c)** மாத்திரம் (4) மேற்கூறிய யாவும்.

**1.7** பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் பின்வரும் எந்த நிறுவனத்தால் மேற்பார்வை செய்யப் படுகின்றன?

(1) கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையம் (2) இலங்கை மத்திய வங்கி

(3) வணிக அமைச்சு (4) வர்த்தக சம்மேளனம்

**1.8** பின்வருவனவற்றுள் இலத்திரனியல் பணத்திற்கான ஓர் உதாரணமாக அமைவது எது?

(1) காசோலைகள் (2) கடன் அட்டைகள் (3) வர்த்தகத் தாள்கள் (4) சாதாரண பங்குகள்

**1.9** பின்வருவனவற்றுள் சிறந்த போக்குவரத்து முறைமை ஒன்றின் ஓர் அம்சமாக (feature) இருப்பது எது?

(1) வேகம் (2) பாதுகாப்பு (3) குறைந்த செலவு (4) மேற்கூறிய யாவும்.

**1.10** தொழில் முயற்சியாளர்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக:

**(a)** அவர்களால் எப்போதும் மாறிவருகின்ற வியாபாரச் சூழலுடன் ஒத்துப்போக முடிகிறது.

**(b)** அவர்கள் வியாபாரத்தில் இடர்களை எதிர்கொள்வதற்கு விரும்புவதில்லை.

**(c)** அவர்கள் தங்களது இலக்குகளை அடைவதை நோக்கி வழிப்படுத்துகின்ற ஒரு திடமான நம்பிக்கையையும் வேலையையும் கொண்டிருக்கின்றனர்.

மேலுள்ளவற்றுள் சரியான கூற்று/கூற்றுக்களாவன:

(1) **(a)** மாத்திரம் (2) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்

(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம் (4) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவுசெய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.11** காசோலையின் முகப்பில் குறுக்காக இரண்டு சமாந்தரக் கோடுகளை மாத்திரம் வரைவது விசேட குறுக்குக் கோடிடல் எனப்படுகிறது.

**1.12** வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஒன்றில், பங்குதாரர்களின் ஆகக்கூடிய எண்ணிக்கை 50 ஆகும்.

**1.13** சேமிப்புக் கணக்குகளும் திறைசேரி உண்டியல்களும் அண்மைப் பணத்திற்கான (near money) உதாரணங்களாகும்.

**1.14** உலகிலுள்ள சகல வணிகங்களும் இலாப நோக்குடைய வணிகங்களாகும்.

**1.15** நிலைபேறான அபிவிருத்தி என்பது எதிர்காலச் சந்ததியினர் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற உரிமையை மீறாது, தற்போதைய தேவைகளை நிறைவேற்றுகின்ற அபிவிருத்தியைக் குறிக்கிறது.

*இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப்புத்தகத்தில் வினாவின் இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதுக.*

**1.16** வணிகத்தின் இரண்டு (02) பண்புகளைக் (characteristics) குறிப்பிடுக.

**1.17** காசோலையொன்றுக்கு பணம் வழங்க மறுக்கப்படக்கூடிய இரண்டு (02) சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

**1.18** காசோலையொன்றுடன் தொடர்புபட்டுள்ள இரண்டு (02) தரப்பினர்களைப் பட்டியலிடுக.

**1.19** சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனங்களின் (SMEs) செயல்திறனை மேம்படுத்துகின்ற இரண்டு (02) வழிமுறைகளை அடையாளங்காண்க.

**1.20** வணிகமொன்றின் ஒழுக்கநெறிக் கோவை ஒன்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் இரண்டு (02) நன்மைகளைக் குறிப்பிடுக.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

உடமையின் அடிப்படையில், வியாபார நிறுவனங்கள் தனியுடமை வியாபாரங்கள், பங்குடமைகள், கம்பனிகள் போன்ற பல்வேறு வழிகளில் வகைப்படுத்தப்படுகின்றன. எந்தவொரு வியாபாரத்தின் நிலைப்புத்தன்மைக்கும் பல்வேறு வகையான ஆதரவுச் சேவைகள் தேவையாக உள்ளன. பணம், தொடர்பாடல், காப்புறுதி, போக்குவரத்து மற்றும் தளவாட வழங்கல்கள் என்பன வியாபாரம் ஒன்றின் வினைத்திறனானதும் பயனுறுதிமிக்கதுமான செயற்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) தனியுடமை வியாபாரமொன்றின் நான்கு (04) பண்புகளை (characteristics) **விபரிக்குக**.

(04 புள்ளிகள்)

(b) பயனுறுதி வாய்ந்த தொடர்பாடலின் மூன்று (03) பண்புத்தரங்களைக் (qualities) **குறிப்பிடுக.**

(03 புள்ளிகள்)

(c) நபர் ஒருவர் காப்புறுதி செய்யக்கூடிய மூன்று (03) இடர்களைப் (risks) **பட்டியலிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

**ஹெல்த் ஸ்மார்ட் (பிரை.) லிமிட்.** என்பது விசேடத்துவமிக்க ஆயுர்வேத மூலிகை மருந்தினைத் தயாரிக்கின்ற, நடுத்தர அளவுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட, புகழ்பெற்ற ஒரு கம்பனியாகும். இதுவரை, கம்பனியின் பொருட்கள் உள்நாட்டிலேயே விநியோகிக்கப்பட்டன. கம்பனியின் தலைவரான **திரு. குணதிலக,** ஐரோப்பிய சந்தைக்கு உள்நாட்டுப் பொருட்களை ஊக்குவிப்பதில் அரசாங்கத்தின் தலையீடு பற்றிய ஒரு செய்தித்தாள் கட்டுரையினை அண்மையில் வாசித்திருந்தார். வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றாக கூட்டிணைக்கப்படுவதன் மூலம் உள்நாட்டு நிறுவனங்களால் பெற்றுக்கொள்ளக்கூடிய நிதியுதவிகள் பற்றி அக்கட்டுரையில் மேலும் விபரிக்கப்பட்டிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) உள்நாட்டு வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு (சர்வதேச) வர்த்தகம் ஆகியவற்றுக்கிடையிலான இரண்டு (02) வேறுபாடுகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) வெளிநாட்டு வர்த்தகம் ஊடாக **ஹெல்த் ஸ்மார்ட் (பிரை.) லிமிட்.** அடைந்துகொள்ளக்கூடிய மூன்று (03) நன்மைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றாக **ஹெல்த் ஸ்மார்ட் (பிரை.) லிமிட்.** கூட்டிணைக்கப் படுவதால் கிடைக்கப்பெறும் இரண்டு (02) அனுகூலங்களை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**கயான் பெரேரா** அவர்கள் அண்மையில் தனது கணக்கீட்டு பட்டப்படிப்பை உள்நாட்டிலுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகம் ஒன்றில் நிறைவுசெய்துள்ளார். அவரது இளமைப் பருவத்திலிருந்து, சமூக மற்றும் சூழலுடன் இணக்கமான வகையில் தனது சொந்த வியாபாரத்தைத் தொடங்குவதன் மூலம் ஒரு தொழில்முயற்சியாளராக வருவதற்கு அவர் கனவு கண்டிருந்தார். தான் ஒரு தொழில்முயற்சியாளர் ஆவதற்கு இதுவே சரியான தருணம் என அவர் திடமாக நம்புகிறார். எவ்வாறாயினும், கணக்கியல் துறையில் ஒரு பட்டதாரியாக இருப்பதால், விசேடமாக சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனங்கள் (SMEs) துறையில் தொழில்முயற்சியாளர்கள் பொதுவாக எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் வியாபாரத் தோல்விகள் பற்றி அவர் நன்கறிவார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) ஒரு தொழில்முயற்சியாளருக்குத் தேவையான இரண்டு (02) திறன்களை (skills) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) தொழில்முயற்சியாண்மையின் நான்கு (04) நன்மைகளைப் **பட்டியலிடுக.** (04 புள்ளிகள்)

(c) SMEs இன் தோல்விக்கான இரண்டு (02) காரணிகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**ரேகா** என்பவர் தற்போது ரஷ்யா மற்றும் அவுஸ்திரேலிய சந்தைகளுக்கு உயர்தரமான பச்சை மற்றும் கறுப்புத் தேயிலையை (green and black tea) ஏற்றுமதி செய்கின்ற **இலங்கை தேயிலைக் கம்பனியின்** செயற்பாடுகளுக்குப் பொறுப்பான சிரேட்ட முகாமையாளராகப் பணியாற்றுகிறார். சர்வதேச வர்த்தகத்தில் விசேடத்துவமிக்க ஒரு சிரேட்ட முகாமையாளராக கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக அவர் தொழில் புரிவதால் பூகோளமயமாதலின் (globalization) வாய்ப்புகள் அதேபோன்று சவால்கள் பற்றி அவர் நன்கறிவார். சர்வதேச தேயிலைத் துறையில் கடுமையான போட்டி நிலவுவதையும் இதன் பிரதிபலிப்பாக பிற தேயிலை ஏற்றுமதியாளர்கள் அவர்களது வியாபார நடவடிக்கைகளில் நிறுவன சமூகப் பொறுப்புடமையினை (CSR) கூட்டிணைக்கின்றமையையும் அவர் அண்மையில் அவதானித்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) பூகோளமயமாதலின் இரண்டு (02) வாய்ப்புகளை (opportunities) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) சமூகப் பொறுப்புடமையின் இரண்டு (02) பகுதிகளைப் (areas) **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(c) **இலங்கைத் தேயிலைக் கம்பனி** தங்களுடைய வியாபார நடவடிக்கைகளில் நிறுவன சமூகப் பொறுப்புடமையை (CSR) கூட்டிணைப்பதன் ஊடாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய நான்கு (04) அனுகூலங்களை **அடையாளங் காண்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**கோக்கனட் மார்ட்** என்பது மிட்டாய்ப் பொருட்களுக்கான தேய்காய் உள்ளீடுகளைத் தயாரிக்கின்ற **திரு. ஜயசிறி** என்பவருக்குச் சொந்தமான நன்கு புகழ்பெற்ற ஏற்றுமதி நோக்கிலான நடுத்தர அளவு தனியுடமை வியாபாரம் ஆகும். **திரு. ஜயசிறி** அவர்கள் இந்த வியாபாரத்தை ஒரு தனியுடமை வியாபாரமாக 30 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்ததுடன் பல்வேறு தடைகளையும் தாண்டி இவ்வியாபாரத்தைத் தொடர்ந்தும் நடத்துகிறார். **கோக்கனட் மார்ட்** இன் துவக்கத்தில், பொருட்கள் உள்நாட்டுச் சந்தையில் மாத்திரம் விற்கப்பட்டதெனினும் தற்போது சர்வதேச சந்தைக்கும்கூட பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அரசாங்கமும்கூட இத்தகைய பொருட்களை ஊக்குவிக்குமுகமாக பல சலுகைகளை அண்மையில் அறிமுகப்படுத்தியிருக்கிறது.

2018 இல், **திரு. ஜயசிறியின்** சிறந்த தொழில்முயற்சித் தலைமைத்துவத்திற்காக தேசிய வர்த்தக சம்மேளத்தினால் கௌரவ விருதொன்று அவருக்கு வழங்கப்பட்டது. **கோக்கனட் மார்ட்** இன் பொது முகாமையாளராக புதிதாக நியமனம் செய்யப்பட்ட **செல்வி. சித்துமாலி ஜயசிறி** அவர்கள் **திரு. ஜயசிறி** அவர்களின் ஒரே மகளாவார். அவர் தங்களுடைய வியாபாரத்தை வரையறுக்கப்பட்ட ஒரு தனியார் கம்பனியாகப் பதிவுசெய்வதால் கிடைக்கின்ற அனுகூலங்கள் பற்றி தனது தந்தைக்கு எடுத்துக் கூறயிருந்தார்.

புதிய முகாமைத்துவம் காரணமாக, **கோக்கனட் மார்ட்** இன் நன்கு அனுபவமிக்க மற்றும் விசுவாசமான, முகாமைத்துவ மற்றும் தொழிற்சாலைப் பணித்தொகுதியினரில் பெரும்பாலானவர்கள் கம்பனியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளனர். ஏற்றுமதி நோக்கிலான நடுத்தர அளவு வியாபாரம் ஒன்றாக இருக்கின்ற **கோக்கனட் மார்ட்** ஆனது வழங்கல் சங்கிலி முகாமைத்துவம், தர உத்தரவாதம் போன்ற பல்வேறு காரணிகளையும் கவனத்திற் கொள்கிறது. கொவிட்-19 நோய்த்தொற்றுப் பரவல் காரணமாக வெளிநாடுகளிலிருந்தான **கோக்கனட் மார்ட்** இன் பொருட்களுக்கான கேள்வி குறைவடைந்துள்ளது. இதன் விளைவாக கடந்த காலாண்டில் அவர்களின் வருமானம் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும், உற்பத்திக்குப் போதுமானளவு மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதிலும் **கோக்கனட் மார்ட்** சிரமங்களை எதிர்கொள்கிறது. எதிர்காலத்தில் தங்களுடைய வியாபாரத்தை வளர்ப்பதற்காக இந்தக் காணிகள் பற்றி **செல்வி சித்துமாலி ஜயசிறி** மதிப்பாய்வை மேற்கொள்கிறார். **திரு. ஜயசிறி** அவர்கள் வியாபாரத்திலிருந்து ஓய்வு பெற்று, சகல வியாபார நடவடிக்கைகளையும் முகாமையையும் **செல்வி. சித்துமாலி ஜயசிறி**யிடம் கையளிக்கத் திட்டமிடுகிறார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியின் இரண்டு (02) அனுகூலங்களையும் இரண்டு (02) பிரதிகூலங்களையும் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்க, பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாக **கோக்கனட் மார்ட்** இனை கூட்டிணைப்பதற்காகச் சமர்ப்பிக்க வேண்டிய இரண்டு (02) ஆவணங்களைப் **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(c) SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி **கோக்கனட் மார்ட்** வியாபாரத்தை **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(d) **கோக்கனட் மார்ட்** நிறுவனத்திற்கு ஒரு வினைத்திறனான போக்குவரத்து ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(e) வர்த்தகத்தின் புதிய போக்குகள் இரண்டினைக் (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |